சுற்று நிருப இல: **2009/16**

# க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும்.

கல்வி அமைச்சு
“இசுருபாய”,பத்தரமுல்ல.

சுற்று நிருப இல: 2009/16

எனது இல:- ED/01/12/06/15/01
பாடசாலை செயற்பாடுகள்,
தனியார் பாடசாலைகள் கிளை.
கல்வி அமைச்சு
"இசுருபாய".பத்தரமுல்ல.
2009-05.18

மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டப் பொறுப்பு பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
பாடசாலை அதிபர்கள்

## க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும்.

"பல்கலைக்கழக அனுமதி தொடர்பான க.பொ.த (உயர் தர) பாடச்சேர்மானங்கள்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 1998.04.09 ஆம் திகதியும் இல.98/15 யினையும் கொண்ட சுற்று நிருபமும் அச்சுற்று நிருபத்தில் செய்யப்பட்டுள்ள சிற்சில திருத்தங்கள் அடங்கலாக வெளியிடப்பட்டுள்ள 1998.11.24 ஆம் திகதியைக் கொண்ட இல:- இ.க/ஆ/103, 1999.08.19ஆம் திகதியைக் கொண்ட இல:-1999/31, 2001.03.23ஆம் திகதியைக் கொண்ட இல:-2001/9, 2001.06.27ஆம் திகதி யைக் கொண்ட இல:- 2001/19, 2004.02.27ஆம் திகதி யைக் கொண்ட இல:-2004/11, 2005.03.03ஆம் திகதியைக் கொண்ட ED/01/12/03/10/01, 2008.09.16 ஆம் திகதி யைக் கொண்ட இல:- 2008/38 ஆகிய சுற்று நிருபத்திருத்தங்களை விஞ்சி இச் சுற்று நிருபம் கீழ்வருமாறு செயல்படும்.

2.0 உயர்தர வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டங்கள் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட புதிய பாடவிதானக் கோட்பாட்டிற்கு அமைய 2009ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகம் செய்யப்படவுள்ளதுடன் 2009ஆம் ஆண்டிலிருந்து 12ஆம் தரத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு தேசிய கல்வி நிறுவகம் மூலம் தயார் செய்யப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக கற்பித்தல் வேண்டும். இப் புதிய பாடத்திட்டத்திற்கேற்ப க.பொ.த(உ.த) பரீட்சை முதன் முறையாக 2011ஆம் ஆண்டில் நடைபெறும். 2008ஆம் ஆண்டில் க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு (12ஆம் தரம்) அனுமதி பெற்று கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அதற்கு முன்பு அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் பழைய பாடத்திட்டங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். எவ்வாறயினும் பழைய பாடத்திட்டத்திற்கமைவான க.பொ.த (உ.த) பரீட்சைகள் 2012ஆம் ஆண்டு வரை மட்டுமே நடாத்தப்படும்.

3.0 2009ஆம் ஆண்டிலும் அதன் பின்பும் 12ஆம் தரத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு இச்சுற்று நிருபத்திலுள்ள க.பொ.த(உ.த) பாடத்துறைகளுக்கான பாடச் சேர்மானங்களும் அவை நடைமுறைப்படுத்தப்படும் விதி முறைகளும் அமுலில் இருக்கும்.

4.0 புதிய பாடவிதானத்தின் கீழும் க.பொ.த(உ.த) வகுப்புக்களில் பிரதான பாடங்கள் மூன்று கற்பிக்கப்படுவதுடன் ஒரு பாடத்திற்காக வாரமொன்றில் 10 பாடவேளைகள் ஒதுக்கப்படும். இதன்படி இவ் விதந்துரைக்கப்பட்டுள்ள பிரதான பாடங்கள் மூன்றிற்காகவும் 30 பாடவேளைகள் பயன்படுத்தப்படும். மீதமாகவுள்ள 10 பாடவேளைகளில் 06 பாடவேளைகள் பொது ஆங்கிலப் பாடத்திற்காக ஒதுக்கப்பட வேண்டியதுடன் பொதுத் தகவல் தொழில்நுட்பம் (GIT) பாடத்திற்காக 12ஆம் தரத்தில் மாத்திரம் 02 பாடவேளைகளை ஒதுக்குதல் வேண்டும். 12ஆம் தரத்தின் மீதிப் பாடவேளைகள் இரண்டும், 13ஆம் தரத்தின் மீதிப் பாடவேளைகள் நான்கும் பாடசாலை முகாமைத்துவ அணியினரின் தற்றுணிபுக்கேற்ப மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உகந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

5.0. 13ஆம் தரத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் பிரதான பாடங்கள் 03யிற்காகவும் பொதுச் சாதாரண பரீட்சை, சாதாரண ஆங்கிலம் எனும் பாடங்களுக்காகவும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சாதாரண ஆங்கிலப் பாடத்திற்காகப் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் அல்லது சித்திகள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காக பயன்படுத்தப்பட மாட்டாது. எனினும் இப் பாடத்தில் பெற்றுக்கொள்ளும் பெறுபேறு க.பொ.த(உ.த) பரீட்சை பெறுபேற்றில் குறிக்கப்படும்.

### 6.0. க.பொ.த(உ.த) பாடத்துறைகளுக்கான பாடச் சேர்மானங்கள்.

பாடசாலைகளில் தற்போது நடைமுறையிலுள்ள பாடத்துறைகள் நான்கிற்கும் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பாடச்சேர்மானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

#### 6.1. கலைப் பாடத்துறை.

மாணவர்கள் மூலம் கலைப் பாடத்துறையின் கீழ் கல்வி கற்பதற்காக கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய பாடச் சேர்மானங்களைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

6.1.1 கீழே தரப்பட்டுள்ள சமூக விஞ்ஞானம் / பிரயோக சமூகக் கற்கைப் பாடத் தொகுதியில் (6.1.6யின் (அ)) குறைந்த பட்சம் ஒரு பாடத்தினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். (மொழிப் பாடங்கள் இரண்டினை அல்லது மூன்றினையும் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு இது பொருந்தாது) மாணவரின் விருப்புக்கேற்ப இத் தொகுதியிலிருந்து இரண்டு பாடங்களையோ அல்லது மூன்று பாடங்களையுமோ தெரிவு செய்து கொள்ள முடியும்.

6.1.2. கீழே தரப்பட்டுள்ள சமயங்களும்,நாகரீகங்களுக்குமான பாடங்களில் (6.1.6யின் ஆ) இருந்து ஏதாவது ஒரு சமயத்தை தெரிவு செய்தால் அச் சமயத்துடன் தொடர்புபட்ட நாகரீகப் பாடத்தைத் தெரிவு செய்யமுடியாது.

6.1.3. கீழே தரப்பட்டுள்ள அழகியல் கல்விப் பாடங்களில் (6.1.6யின் இ) இருந்து பாடம் ஒன்றினை அல்லது இரண்டினைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

6.1.4. கீழே தரப்பட்டுள்ள மொழிப் பாடத்தொகுதியில் (6.1.6யின் ஈ) உள்ள மொழிப் பாடங்களிலிருந்து மாணவரொருவருக்கு விரும்பிய ஏதாவது மொழிப் பாடங்கள் 01யினை அல்லது 02யினைத் தெரிவு செய்து கொள்ளமுடியும். எனினும் பாடங்கள் மூன்றினையும் மொழிப்பாடங்களாகத் தெரிவு செய்து கொள்வதாயின் அது கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

- 6.1.6 யின் ஈ (i)யில் குறிப்பிடப்படும் பாடங்கள் மூன்றும்
- 6.1.6 யின் ஈ (i),(ii) எனும் உப தொகுதிகள் இரண்டிலும் உட்படக்கூடியவாறு பாடங்கள் மூன்று

6.1.5. மொழிப் பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்து கொள்ளும் மாணவரொருவர் தமது மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞானம் / பிரயோக சமூகக் கற்கை, சமயங்களும் நாகரீகங்களும், அழகியல் கல்வி எனும் பாடத் தொகுதிகளில் இருந்து விரும்பிய பாடமொன்றினைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

6.1.6 **கலைப் பாடத்துறைக்கான பாடத்தொகுதிகள்**

(அ.) **சமூக விஞ்ஞானம் / பிரயோக சமூகக் கற்கைப் பாடங்கள்.**

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது உலக வரலாறு)
4. மனைப் பொருளியல்
5. அரசியல் விஞ்ஞானம்
6. அளவையியலும் விஞ்ஞான முறையும்
7. கணக்கீடு அல்லது வணிகப் புள்ளி விபரவியல்
8. விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம்
9. தொழில் நுட்பவியல் பாடங்களில் ஒரு பாடம் (குடிசார் தொழில்நுட்பவியல், அல்லது பொறிமுறைத் தொழில்நுட்பவியல், அல்லது மின்,இலத்திரன் தகவல் தொழில்நுட்பவியல், அல்லது உணவுத் தொழில்நுட்பவியல், அல்லது விவசாயத் தொழில்நுட்பவியல், அல்லது உயிர் வளத் தொழில்நுட்பவியல்)
10. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
11. தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பம்

(ஆ.) **சமயங்களும் நாகரீகங்களுக்குமான பாடங்கள்**

1. பௌத்தம் அல்லது பௌத்த நாகரீகம்
2. கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம்
3. இந்து சமயம் அல்லது இந்து நாகரீகம்
4. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம்
5. கிரேக்க,உரோம நாகரீகம்

(இ). **அழகியல் கல்விப் பாடங்கள்**

1. சித்திரம்
2. நாட்டியம் (தேசிய அல்லது பரத நாட்டியம்)
3. சங்கீதம் (கீழைத்தேய சங்கீதம் அல்லது கர்நாடக சங்கீதம் அல்லது மேலைத்தேய சங்கீதம்)
4. நாடகமும் அரங்கியலும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)

(ஈ). **மொழிப் பாடங்கள்**

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம்
2. அரபு, பாளி, சமஸ்கிருதம்.
3. சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ருசியன், ஹிந்தி, ஜப்பான்.

6.2 **வர்த்தகப் பாடத்துறை.**

இப் பாடத்துறையின் கீழ் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் பாடங்களிடையே குறைந்த பட்சம் இரண்டினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. கணக்கீடு
2. வணிகக் கல்வி
3. பொருளியல்

மீதமாகவுள்ள பாடத்தினை கீழ்வரும் பாடங்களில் இருந்து தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

1. வணிகப் புள்ளிவிபரவியல்.
2. புவியியல்.
3. அரசியல் விஞ்ஞானம்
4. வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது உலக வரலாறு)
5. அளவையியலும் விஞ்ஞான முறையும்.
6. ஆங்கிலம்.
7. ஜேர்மன்.
8. பிரெஞ்சு.
9. விவசாய விஞ்ஞானம்.
10. இணைந்த கணிதம்.
11. தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பம்.

### 6.3. உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறை.

இப் பாடத்துறையின் கீழ் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் பாடங்களினிடையே மூன்றினைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

1. உயிரியல்.
2. இரசாயனவியல்.
3. பௌதிகவியல்.
4. விவசாய விஞ்ஞானம்.
5. கணிதம்.

### 6.4. பௌதிக விஞ்ஞானப் பாடத்துறை.

இப் பாடத்துறையின் கீழ் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் பாடங்களினிடையே மூன்றினைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

1. இணைந்த கணிதம்..
2. இரசாயனவியல்.
3. பௌதிகவியல்.
4. உயர் கணிதம்.

7.0. மேற் குறிப்பிட்டவாறு பாடத்துறைகளின் கீழ் உரிய பாடச் சேர்மானங்களைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். எனினும் குறித்த பாடசாலையில் போதியளவு மாணவர் தொகை இருந்து நேர சூசியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் வசதிகள் செய்து கொடுப்பதற்கும் இயலுமை இருந்தால் மாத்திரம் தாம் விரும்பிய பாடங்கள் அடங்கிய பாடச் சேர்மானமொன்றை தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பினை மாணவருக்கு பெற்றுக் கொடுக்க முடியும். எனினும் பாடங்களிடையே "அல்லது" எனக் குறிப்பிடப்பட்டிருப்பின், அதில் ஒரு பாடத்தினை மாத்திரம் தெரிவு செய்து கொள்ள வேண்டும் எனும் நிபந்தனைக்கிணங்க தேர்வினைச் செய்தல் வேண்டும்.

8.0. ஒன்றுக்கு மேற்பட்ட பாடத்துறைகளின் கீழ் பாடங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் பரீட்சை பெறுபேறுகள் "பொது பாடத்துறை" என அழைக்கப்படும் விசேட பாடத்துறை ஒன்றின் கீழேயே பெற்றுத் தரப்படும்.

9.0. பல்கலைக்கழகப் பட்டப் பாடநெறிகளுக்கான பாடச் சேர்மானங்கள்.

9.1. பல்கலைக்கழகங்கள் மூலம் நடாத்தப்படும் முதல்ப் பட்டப் பாடநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்காக மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் தோற்றி இருக்க வேண்டிய பாடச் சேர்மானங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பல்கலைக்கழக முதல் பட்டப் பாடநெறிகளுக்கான அடிப்படைத் தகைமையாக க.பொ.த(உ.த) பரீட்சையில் உரிய பிரதான பாடங்கள் மூன்றிலும் சித்தி பெற்றிருப்பதுடன் பொதுச் சாதரண பரீட்சையில் தேவையான அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பதும் அத்தியாவசியமாகும். எனினும் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக் கொள்கைக்கு ஏற்பவும் அனுமதித்துக் கொள்ளக் கூடிய எண்ணிக்கைக்கு ஏற்பவும் அடிப்படைத் தகைமைகளைப் பெற்றோறிடையேயிருந்து தெரிவு செய்தல் செயற்பாட்டை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும்.

9.2. பல்கலைக்கழக முதல் பட்டப் பாடநெறிகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ள க.பொ.த(உ.த) பாடச் சேர்மானங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுமாயின் அவ்அவ் கற்கை வருடங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் வெளியிடப்படும் "இலங்கைப் பல்கலைக்கழக பட்டபயில் நெறிகளுக்கு அனுமதி" எனும் கைநூலை பரிசீலித்தல் வேண்டும்.

#### 1. கலை (ARTS)

கலைப் பாடத்துறையின் கீழ் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடங்கள்.

2. கலை (SP)-(ARTS-SP)

கலைப் பாடத்துறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடங்கள். இங்கு

- மொழிப் பாடங்கள் இரண்டு அதிகமாக தோற்றாதிருத்தல் வேண்டும்.
- கீழ்வரும் பாடங்களில் ஒன்றை விட அதிகமாக தோற்றாதிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| கணக்கீடு | வணிகப் புள்ளிவிபரவியல் |
| வணிகக் கல்வி | பொருளியல் |

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்டசம் சாதாரண (S) சித்தி)

3. கலை(SAB)-(ARTS-SAB)

கலை,வர்த்தகம் எனும் ஏதாவது பாடத்துறையொன்றின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடங்கள்

4. தொடர்பாடல் கற்கைகள் (COMMINICATION STUDIES)

சிங்களம், அல்லது தமிழ் அல்லது ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் (C) சித்தியோடு ஏதாவது மூன்று பாடங்கள்.

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தியொன்று)

5. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் (PEACE & CONFIICT RESOLUTION)

அனுமதிக்கப்பட்ட ஏதாவது மூன்று பாடங்கள்.

6. இஸ்லாமியக் கற்கைகள் (ISLAMIC STUDIES)

குறைந்த பட்சம் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகப் பாடத்துடன் வேறு ஏதாவது இரண்டு பாடங்கள்.

7. அரபு மொழி (ARABIC LANGUAGE)

அரபு மொழியுடன் வேறு ஏதாவது இரண்டு பாடங்கள்.

8. சங்கீதம்/ நடனம்/ சித்திரமும்-வடிவமைப்பும்/ நாடகமும் அரங்கமும்/ கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும்/ சித்திரமும் சிற்பமும். (MUSIC/ DANCE/ ART-DESIGN/ DRAMA & THEATRE/ VISUAL & TECHNOLOGICAL ARTS/ ART & SCULPTURE)

மேற்கூறப்பட்ட பாடநெறிகளில் ஒன்றைக் கற்க விரும்புவோர் தாம் விரும்பும் கற்கை நெறிக்கு உரிய பாடத்தில் (சங்கீதம்/ நடனம்/ சித்திரம்/ நாடகமும் அரங்கியலும்) குறைந்த பட்சம் திறமைச்(C) சித்தியோடு ஏனைய ஏதாவது இரு பாடங்கள்.

9. முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவம் (சிறப்பு)/ சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்/ வணிகவியல். (MANAGEMENT/ PUBLIC MANAGEMENT (SPECIAL)/ ESTATE MANAGEMENT & VALUATION/ COMMERCE)

மேற்கூறப்பட்ட கற்கை நெறிகளுக்காக கீழ்க் குறிப்பிடப்படும் பாடச் சேர்மானங்களிடையே ஒரு பாடச் சேர்மானம்.

i. வணிகக் கல்வி, பொருளியல், கணக்கீடு

அல்லது

ii. குறைந்த பட்சம் மேலே i யில் குறிப்பிடப்பட்ட பாடங்களிரண்டும் கீழ் குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து ஒரு பாடமும்

| | |
|---|---|
| விவசாய விஞ்ஞானம். | புவியியல் |
| ஜேர்மன் | இணைந்த கணிதம் |
| அரசியல் விஞ்ஞானம் | பௌதிகவியல் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும். | பிரெஞ்சு |
| வணிகப் புள்ளிவிபரவியல் | ஆங்கிலம் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம். | வரலாறு |

**10. முகாமைத்துவக் கற்கைகள் (TV) (MANEGMENT STUDIES-TV)**

ஏதாவது பாடத்துறையின் கீழ் ஏதாவது மூன்று பாடங்கள்

**11. வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு). (BUSINESS INFORMATION SYSTEMS) (SPECIAL)**

கீழ் குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து மூன்று பாடங்கள்

கணக்கீடு
பொருளியல்
வணிகக் கல்வி
வணிகப் புள்ளிவிபரவியல்

**12. மருத்துவம்/ பல் அறுவைச் சிகிச்சை/ விலங்கு மருத்துவ விஞ்ஞானம் (MEDICINE/ DENTAL SURGERY/ VETERINARY SCIENCE)**

கீழ் வரும் பாடங்கள் மூன்றும்

உயிரியல்
இரசாயனவியல்
பௌதிகவியல்

**13. விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (AGRICULTURAL TECNOLOGY & MANAGEMENT)**

கீழ் குறிப்பிடப்படும் பாடச் சேர்மானங்களிடையே ஒரு பாடச் சேர்மானம்

i. இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல்.
ii. இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது கணிதம், உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம்.
iii. இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம்.

**14. விவசாயம் (AGRICULTURE)**

மேலே குறிப்பிட்ட விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் கற்கை நெறிக்கு உரியதான பாடச் சேர்மானம். (13ஆம் பந்தியை பார்க்க)

**15. உணவு விஞ்ஞானமும் ஊட்டமும் (FOOD SCIENCE & NUTRITION)**

மேலே குறிப்பிட்ட விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் கற்கை நெறிக்கு உரியதான பாடச் சேர்மானம். (13ஆம் பந்தியை பார்க்க).

**16. உணவு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் (FOOD SCIENCE & TECHNOLOGY)**

இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்.

**17. ஆயுர்வேதம்/ யூனானி/ சித்த வைத்தியம் (AYUVEDA/ UNANI/ SIDDHA)**

இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களும்.

**18. உயிரியல் விஞ்ஞானம் (BIOLOGICAL SCIENCE)**

உயிரியல், இரசாயனவியல் என்பவற்றுடன் கீழ் வரும் பாடங்களிலிருந்து ஒரு பாடம்

விவசாய விஞ்ஞானம்
பௌதிகவியல்
கணிதம் அல்லது இணைந்த கணிதம்
உயர் கணிதம்

**19. பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) (APPLIED SCIENCES (BIOLOGICAL SCIENCE)**

மேலே குறிப்பிட்ட உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்கு உரியதான பாடச் சேர்மானம் (18ஆம் பந்தியைப் பார்க்க)

**20. சுகாதார விருத்தி (HEALTH PROMOTION)**

மேலே குறிப்பிடப்பட்ட உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்கு உரியதான பாடச் சேர்மானம் (18ஆம் பந்தியை பார்க்க).

**21. தாதியியல் (NURSING)**

உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் எனும் பாடங்கள் மூன்றும்

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்சம் சாதாரண (S) சித்தியொன்று.)

**22.** மருந்தகவியல் **(PHARMACY)**

இரசாயனவியல் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச்(C) சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல் எனும் பாடங்கள் மூன்றும்

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் (C) சித்தியொன்று.)

**23.** மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் **(MADICAL LABORATARY SCIENCES)**

உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் எனும் பாடங்கள் மூன்றும்

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்சம் சாதாரண (S) சித்தியொன்று.)

**24.** ஊடுகதிர்ப்படவியல் **(RADIOGRAPHY)**

உயிரியியல், இரசாயனவியல், பௌதிகவியல் எனும் பாடங்கள் மூன்றும்

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்சம் சாதாரண (S) சித்தியொன்று.)

**25.** இயன் மருத்துவம் **(PHYSIOTHERAPHY)**

இரசாயனவியல், பௌதிகவியல் என்பவற்றுடன் கீழ்வருவனவற்றுள் ஒரு பாடம்.

| | |
|---|---|
| உயிரியல் | இணைந்த கணிதம் |
| உயர் கணிதம் | கணிதம் |

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்த பட்சம் சாதாரண (S) சித்தியொன்று.)

**26.** மூலக்கூற்று உயிரியியலும் உயிரசாயனவியலும் **(MOLUCULAR BIOLOGY & BIOCHEMISTRY)**

உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் எனும் பாடங்கள் மூன்றும்.

**27.** மீன்பிடியும் கடல்சார் விஞ்ஞானங்களும் **(FISHERIES & MARRINE SCIENCES)**

மூலக்கூற்று உயிரியலும் உயிரசாயனவியலும் கற்கை நெறிக்கு உரியதான பாடச் சேர்மானம் (26ஆம் பந்தியை பார்க்க).

**28.** சூழல் பாதுகாப்பும் முகாமைத்துவமும் **(ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMANT)**

உயிரியல், இரசாயனவியல் என்பவற்றுடன் கீழ்வரும் பாடங்களுள் ஒரு பாடம்

| | |
|---|---|
| பௌதிகவியல் | இணைந்த கணிதம் |
| விவசாய விஞ்ஞானம் | உயர் கணிதம் |
| கணிதம் | |

**29.** விலங்கு விஞ்ஞானமும் மீன் பிடித்தலும் **(ANIMAL SCIENCE & FISHERIES)**

கீழ்வரும் பாடச் சேர்மானங்களிடையேயிருந்து ஒரு பாடச் சேர்மானம்.

i. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல்
ii. உயிரியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம்.

**30.** உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும் **(FOOD PRODUCATION & TECHNOLOGY MANAGEMANT)**

விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் பாடநெறிக்கு தேவையான பாடச் சேர்மானம் (13ஆம் பந்தியைப் பார்க்க)

**31.** பொறியியல் **(ENGINEERING)**

கீழ் குறிப்பிடப்படும் பாடங்கள் மூன்றும்

இரசாயனவியல்    இணைந்த கணிதம்    பௌதிகவியல்

**32.** பொறியியல் **(EM)-** நில வளங்கள் பொறியியல் **(ENGINEERING (EM)-EARTH RESOURCES ENGINEERING)**

மேலே காட்டப்பட்டுள்ள பொறியியல் பாடநெறிக்கு உரிய பாடச் சேர்மானம் (31ஆம் பந்தியைப் பார்க்க)

33. பொறியியல் **(TM)-**துணி மற்றும் ஆடைத் தொழில்நுட்பம் **(ENGINEERING (TM)-TEXTILE & CLOTHING TECHNOLOGY)**

மேலே காட்டப்பட்டுள்ள பொறியியல் பாடநெறிக்கு உரிய பாடச் சேர்மானம் (31ஆம் பந்தியைப் பார்க்க)

34. பௌதிக விஞ்ஞானம் **(PHYSICAL SCIENCE)**

இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம், இரசாயனவியல் அல்லது பௌதிகவியல் உட்பட கீழ் குறிப்பிடப்படும் பாடங்களுள் மூன்று பாடங்கள்

| | | |
|---|---|---|
| இணைந்த கணிதம் | இரசாயனவியல் | உயிரியல் |
| உயர் கணிதம் | பௌதிகவியல் | விவசாய விஞ்ஞானம் |

**35.** கணனி விஞ்ஞானம் **(COMPUTER SCIENCE)**

கீழ் வரும் பாடங்களுள் மூன்று பாடங்கள்

இணைந்த கணிதம்
உயர் கணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

இணைந்த கணிதம், பௌதிகவியல், உயர் கணிதம் எனும் பாடங்களில் ஒன்றுக்கு குறைந்த பட்சம் திறமைச்(C) சித்தியொன்று.

**36.** தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் **(INFPRMATION AND COMMUNICATION TECHNOLOGY)**

கீழே தரப்பட்டுள்ள பாடங்களுள் மூன்று பாடங்கள். இதில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திற்கு திறமைச் (C) சித்தியொன்று

| | |
|---|---|
| உயர் கணிதம் | பௌதிகவியல் |
| கணிதம் அல்லது இணைந்த கணிதம் | இரசாயனவியல் |
| கணக்கீடு | பொருளியல் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | உயிரியல் |
| அளவையியலும் விஞ்ஞானமுறையும் | வணிகக் கல்வி |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | புவியியல் |
| சமஸ்கிருதம் | |

சங்கீதம் (கீழைத்தேய சங்கீதம் அல்லது கர்நாடக சங்கீதம் அல்லது மேலைத்தேய சங்கீதம்)

(க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலம்,கணிதப் பாடங்களில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தியொன்று.)

**37.** பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிகவிஞ்ஞானம்) **(APPLIED SCIENCES- PHYSICAL SCIENCE)**

கீழ் வரும் பாடங்களுள் மூன்று பாடங்கள்

| | |
|---|---|
| விவசாய விஞ்ஞானம் | இணைந்த கணிதம் |
| உயிரியல் | உயர் கணிதம் |
| இரசாயனவியல் | பௌதிகவியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம். | |

**38.** போக்குவரத்து, தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் **(TRANSPORT & LOGISTICS MANAGEMANT)**

பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் எனும் பாடங்கள் மூன்றும்.

**39.** கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் **(INDUSTRIAL STATISTICS & METHAMATICAL FINANCE)**

இணைந்த கணிதம் அடங்கலாக கீழ் வரும் பாடங்களிலிருந்து மூன்று பாடங்கள்

| | |
|---|---|
| உயர் கணிதம் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | இரசாயனவியல் |

**40.** புள்ளி விபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் **(STATISTICS & OPERATIONS RESEARCH)**

இணைந்த கணிதம் பாடத்துடன் வேறு ஏதாவது விஞ்ஞானப் பாடங்கள் இரண்டு

**41.** கணக்கிடலும் தகவல் முறைமையும் **(COMPUTING & INFORMAYION SYSTEMS)**

கீழ் வரும் பாடங்களிடையே மூன்று பாடங்கள்

| | |
|---|---|
| இணைந்த கணிதம் | பௌதிகவியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் |

இணைந்த கணிதம், பௌதிகவியல், உயர் கணிதம் எனும் பாடங்களில் ஒன்றுக்கு குறைந்த பட்சம் திறமைச்(C) சித்தி.

**42.** தகவல் தொழில்நுட்பம்/ முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் **(INFORMATION TECHNOLOGY –IT/ MANAGEMANT & INFORMATION TECHNOLOGY-MIT)**

கீழ் வரும் பாடங்களிலிருந்து மூன்று பாடங்கள்.

| | |
|---|---|
| உயர் கணிதம் | இணைந்த கணிதம் |
| கணிதம் | பௌதிகவியல் |

குறைந்த பட்சம் ஒரு பாடத்தில் திறமைச்(C) சித்தி

**43.** கணிய அளவையியல் (கட்டடப் பொருளியல்) **(QUANTITY SUREYING-BUILDING ECONOMICS)**

கீழ் வரும் பாடங்களிலிருந்து குறைந்த பட்சம ஒரு பாடம்

| | |
|---|---|
| இணைந்த கணிதம் | உயர் கணிதம் |

மற்றும்

கீழ் வரும் பாடங்களிலிருந்து ஒரு பாடம் அல்லது இரண்டு பாடங்கள்

| | |
|---|---|
| கணக்கீடு | பொருளியல் |
| வணிகப்புள்ளிவிபரவியல் | இரசாயனவியல் |
| வணிகக்கல்வி | பௌதிகவியல் |
| தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்பம். | |

இதற்கு மேலதிகமாக க.பொ.த(சா.த) பரீட்சையில்,
அ. கணிதம், ஆங்கிலப் பாடங்களில் குறைந்த பட்சம் திறமைச் (C) சித்தி
ஆ. விஞ்ஞானப் பாடத்திற்கு குறைந்த பட்சம் சாதாரண (S) சித்தி

**44.** அளவையியல் விஞ்ஞானம் **(SURVEYING SCIENCE)**

பௌதிகவியல், இணைந்த கணிதம் என்பவற்றுடன் வேறு ஏதாவது பாடமொன்று.

**45.** பட்டினம், நாடு திட்டமிடல் **(TOWN & COUNTRY PLANNING)**

கீழ் வரும் பாடங்களிலிருந்து குறைந்த பட்சம் இரு பாடங்கள்

| | |
|---|---|
| கணக்கீடு | கணிதம் |
| விவசாய விஞ்ஞானம் | புவியியல் |
| உயிரியல் | உயர் கணிதம் |
| வணிகக்கல்வி | அளவையியலும் விஞ்ஞானமுறையும் |
| பொருளியியல் | அரசியல் விஞ்ஞானம் |
| இரசாயனவியல் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்பம். |
| வணிகப்புள்ளிவிபரவியல் | |

மூன்றாவது பாடமாக கீழ் வரும் பாடங்களிலிருந்து ஒன்று

| | | |
|---|---|---|
| அரபு | கிறிஸ்தவ நாகரீகம் | மலாய் |
| சித்திரம் | மனைப்பொருளியல் | பாளி |
| பௌத்தம் | ஹிந்தி | ருசியன் |
| சமஸ்கிருதம் | பௌத்த நாகரீகம் | இந்துசமயம் |
| கிறிஸ்தவம் | இந்து நாகரீகம் | சிங்களம் |
| இஸ்லாமியநாகரீகம் | தமிழ் | ஜப்பான் |
| ஆங்கிலம் | இஸ்லாம் | பிரெஞ்சு |
| வரலாறு | ஜேர்மன் | சீனம் |
| கிரேக்க,உரோம நாகரீகம் | | |

(இதற்கு மேலதிகமாக க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கும் கணிதப் பாடத்திற்கும் குறைந்த பட்சம் திறமைச்(C) சித்தி)

**46. கட்டடம் சூழல் (கட்டடக் கலை)/ வடிவமைப்பு (கட்டடக் கலை) (BULT ENVIRONMENT (ARCHITECTURE)/ DESIGN (ARCHITECTURE)**

i. கீழே காட்டப்பட்டுள்ள பாடங்களுள் குறைந்த பட்சம் ஒரு பாடம்

| | | |
|---|---|---|
| சித்திரம் | புவியியல் | உயிரியல் |
| உயர் கணிதம் | இரசாயனவியல் | பௌதிகவியல் |
| இணைந்த கணிதம் | | |

மற்றும்

ii. கீழே காட்டப்பட்டுள்ள பாடங்களுள் ஒரு பாடம் அல்லது இரண்டு பாடங்கள்

| | | |
|---|---|---|
| கணக்கீடு | ஹிந்தி | அரபு |
| இந்து நாகரீகம் | பௌத்த நாகரீகம் | வரலாறு |
| வணிகக்கல்வி | மனைப்பொருளியல் | பாளி |
| இஸ்லாமிய நாகரீகம் | ஜப்பான் | பிரெஞ்சு |
| கிறிஸ்தவ நாகரீகம் | பொருளியல் | சிங்களம் |
| கணிதம் | ஆங்கிலம் | சீனம் |
| சமஸ்கிருதம் | ஜேர்மன் | அரசியல் விஞ்ஞானம் |
| தகவல், தொடர்பாடல் தொழிநுட்பம் | | வணிகப் புள்ளிவிபரவியல் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | | கிரேக்க,உரோம நாகரீகம் |

இதற்கு மேலதிகமாக கீழ்வரும் தகைமைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
(அ). க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் சாதாரண(S) சித்தி

(ஆ). க.பொ.த(சா.த) பரீட்சையில் கணித பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச்(C) சித்தி அல்லது க.பொ.த (உ.த) பரீட்சையில் கணித பாடத்திற்கு குறைந்தபட்சம் சாதாரண(S) சித்தி

**47. நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் (FASHION DESGIN & PRODUCT DEVELOPMENT)**

ஏதாவது பாடத்துறையிலிருந்து ஏதாவது மூன்று பாடங்கள்

(க.பொ.த(சா.த) பரீட்சையில் கணித பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தியும் ஆங்கிலப்பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண(S) சித்தியும்)

**48. சட்டம் (LAW)**

I. கீழ் வரும் பாடங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடங்கள்

| | |
|---|---|
| கணக்கீடு | அரசியல் விஞ்ஞானம் |
| விவசாய விஞ்ஞானம் | வணிகக்கல்வி |
| புவியியல் | உயர் கணிதம் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | வரலாறு |
| இரசாயனவியல் | பொருளியல் |
| பௌதிகவியல் | உயிரியல் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | |
| கணிதம் அல்லது இணைந்த கணிதம் | |

அல்லது

II. மேற்கூறப்பட்ட பாடங்களில் இரண்டு அல்லது ஒன்றுடன் கீழ்வரும் பாடங்களிலிருந்து ஒரு பாடம் அல்லது இரு பாடங்கள்.

| | |
|---|---|
| பௌத்தம் அல்லது பௌத்தநாகரீகம் | சீனம் |
| இந்துசமயம் அல்லது இந்து நாகரீகம் | பாளி |
| கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம் | பிரெஞ்சு |
| இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம் | ஜப்பான் |
| ஆங்கிலம் | சமஸ்கிருதம் |
| சிங்களம் | ஜேர்மன் |
| தமிழ் | அரபு |
| கிரேக்க,உரோம நாகரீகம் | |

(க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கிலப்பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்(C) சித்தி.)

**49. வசதிகள் முகாமைத்துவம் (FACILITIES MANAGEMENT)**

இணைந்த கணிதம் அல்லது கணக்கீடு உடன் கீழ்வரும் பாடங்களிலிருந்து ஏதாவது இரு பாடங்கள்

வணிகப் புள்ளிவிபரவியல் பௌதிகவியல் வணிகக் கல்வி
பொருளியல் உயர் கணிதம் இரசாயனவியல்
தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்பம்.

இதற்கு மேலதிகமாக க.பொ.த(சா.த) பரீட்சையில் கீழ்வரும் தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு குறைந்தபட்சம் திறமைச்(C) சித்தி.
(ஆ) விஞ்ஞானப் பாடத்திற்கு குறைந்த பட்சம் சாதாரண(S) சித்தி

**50. கணக்கிடலும் முகாமைத்துவமும் (COMPUTATION & MANAGEMENT)**

பொருளியல் அல்லது இணைந்த கணிதம் உட்பட ஏதாவது மூன்று பாடங்கள்

(இதற்கு மேலதிகமாக க.பொ.த(சா.த) பரீட்சையில் கணித பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச்(C) சித்தி.)

**51. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) (MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL))**

ஏதாவது பாடத்துறையிலிருந்து (ஏதாவது மூன்று பாடங்கள்.)

**52. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (SCIENCE & TECHNOLOGY)**

உயிரியல் விஞ்ஞான, பௌதீகவிஞ்ஞான கற்கை நெறிகளுக்குத் தேவையான பாடங்கள் மூன்று (18 மற்றும் 34ம் பந்திகளை பார்க்க)

**53. கணணி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (COMPUTER SCIENCE & TECHNOLOGY)**

இந்தக் கற்கை நெறிக்காகவும் உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவிஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதீகவிஞ்ஞானம்) கற்கை நெறிகளுக்கு தேவையான பாடங்கள் மூன்று (18,34,37ம் பந்திகளை பார்க்க)

**54. தொழில் முயற்சியும், முகாமைத்துவமும் (ENTREPRENEURSHIP & MANAGEMENT)**

ஏதாவது பாடத்துறையிலிருந்து ஏதாவது மூன்று பாடங்கள்.

**55. விலங்கு விஞ்ஞானம் (ANIMAL SCIENCE)**

உயிரியியல் விஞ்ஞான கற்கை நெறிக்குத் தேவையான தகைமைகள் பொருந்தும் (18ஆம் பந்தியை பார்க்க)

**56. ஏற்றுமதி விவசாயம் (EXPORT AGRICULTURE)**

உயிரியல் விஞ்ஞான கற்கை நெறிகளுக்கத் தேவையான தகைமைகள் பொருந்தும் (18ஆம் பந்தியை பார்க்க)

**57. தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் (TEA TECHNOLOGY & VALUE ADDITION)**

கீழ்வரும் ஒரு பாடச்சேர்மானத்திலிருந்து மூன்று பாடங்கள்

I. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம்
II. இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

**58. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் (INDUSTRIAL INFORMATION TECHNOLOGY)**

ஏதாவது பாடத்துறையிலிருந்து ஏதாவது மூன்று பாடங்கள்.

**59.** கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் **(MINERAL RESOURCES & TECHNOLOGY)**

கீழ்வரும் ஒரு பாடச் சேர்மானம்

I. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல்
II. இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

**60.** நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் **(AQUATIC RESOURCES TECHNOLOGY)**

உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்குத் தேவையான தகைமைகள் பொருந்தும் (18ஆம் பந்தியை பார்க்க)

**61.** பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் **(PALM & LATEX TECHNOLOGY & VALUE ADDITION)**

கீழ்வரும் ஒருபாடச் சேர்மானத்திலிருந்து மூன்று பாடங்கள்.

I. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம்
II. இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

**62.** விருந்தோம்பல் சுற்றுலா, நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் **(HOSPITALITY TOURISUM & EVENTS MANAGEMENT)**

ஏதாவது பாடத்துறையிலிருந்து மூன்று பாடங்கள்.

**63.** உடற்கல்வி/ விளையாட்டு விஞ்ஞானமும், முகாமைத்துவமும் **(PHYSICAL EDUCATION/ SPORTS SCIENCES & MANAGEMENT)**

கீழ்வரும் பாடங்களிலிருந்து ஏதாவது மூன்று பாடங்கள்.

| | |
|---|---|
| இணைந்த கணிதம் | விவசாய விஞ்ஞானம் |
| உயர்கணிதம் | பொருளியல் |
| கணிதம் | புவியியல் |
| பௌதிகவியல் | கணக்கீடு |
| இரசாயனவியல் | வணிகக்கல்வி |
| உயிரியல் | வரலாறு |
| வணிகப்புள்ளிவிபரவியல் | அரசியல் விஞ்ஞானம் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | |

**64.** பேச்சும் மொழிச் சிகிச்சையும் **(SPEECH & LANGUAGE THEARAPHY)**

உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் கலை எனும் ஏதாவது பாடத்துறைகளிலிருந்து ஏதாவது 3 பாடங்கள்.

இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படுவதோடு மாணவர்களை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இச்சுற்று நிருபத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

M.M.N.D. பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:-

1. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர்
2. தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம்
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
6. கணக்காய்வாளர் நாயகம்
7. கல்வி அமைச்சின் சகல பதவி நிலை உத்தியோகத்தர்கள்
8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைத் தலைவர்கள்

## குறிப்பு

1. இச் சுற்று நிருப விதிமுறைகள் 2009யிலும் அதன் பின்னரும் 12ஆம் வகுப்புக்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கே பொருந்தும்.

2. 2009யிற்கு முன்னர் அதாவது 2008யிலும் அதற்கு முன்னரும் 12ஆம் வகுப்புக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் தொடர்பில் பழைய சுற்று நிருபத்தினதும் (இல 98/15) அதன் திருத்தச் சுற்று நிருபங்களினதும் விதிமுறைகள் அமுலில் இருக்கும்.

3. எவ்வாறாயினும் பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக க.பொ.த(உ.த) பரீட்சை 2012ஆம் ஆண்டு வரை மாத்திரமே நடாத்தப்படும்.

4. புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 2008ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய வருடங்களிலும் க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றிய / தோற்றும் மாணவர்கள் க.பொ.த(உ.த) 12ஆம் தரத்தில் அனுமதி பெறுவதற்காக கீழ்வரும் அடிப்படைத் தகைமைகளை பூரணப் படுத்தியிருத்தல் வேண்டும்.

   - ஊடக மொழியும் கணிதமும் உட்பட க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் 9 பாடங்களில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றுள் குறைந்த பட்சம் 3 பாடங்களில் திறமைச் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.

   - க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான ஏனைய விதிமுறைகளும் விசேட தகைமைகளும் க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான சுற்று நிருபத்திற்கு ஏற்ப நடைபெறுதல் வேண்டும்.

5. இப் புதிய சுற்றுநிருபத்திற்கேற்ப க.பொ.த(உ.த) பரீட்சையில் பிரதான பாடங்கள் மூன்று பொதுச் சாதாரண பரீட்சை , பொது ஆங்கிலம் எனும் பாடங்கள் ஐந்திற்கும் தோற்றுதல் வேண்டும்.

6. எனினும் பல்கலைக்கழக அனுமதிக்காக பொது ஆங்கிலப் பாடம் பயன்படுத்தப்பட மாட்டாது.

7. கலைப் பாடத்துறையின் கீழ் மொழிப் பாடங்கள் மூன்றினை தமிழ், சிங்களம், ஆங்கிலம் என தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மொழியில் பாடமொன்று அல்லது பாடங்களுடன் அரபு, பாளி, சமஸ்கிருதம் எனும் பாடங்கள் அல்லது பாடமொன்று உட்படக்கூடியவாறு 03 பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

8. சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ருசியன், ஹிந்தி, ஜப்பான் ஆகிய மொழிப் பாடங்கள் ஒன்று அல்லது இரண்டு உட்பட மொழிப் பாடங்கள் மூன்றினைத் தெரிவு செய்து கொள்ள முடியாது.

9. ஏதாவது மொழிப் பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மொழிப் பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்து கொள்வதாயின் மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கை பாடங்கள், சமயங்களுக்கும் நாகரிகங்களுக்குமான பாடங்கள், அழகியல் கல்விப் பாடங்கள் எனும் பாடத்தொகுதிகளிலிருந்து விரும்பிய பாடமொன்றினை தெரிவு செய்து கொள்ள முடியும்.

10. ஒரு சில பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவப் பாடநெறிகளுக்காக க.பொ.த(உ.த) பரீட்சையில் கணக்கீடு பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கின்றது. எனவே பல்கலைக்கழகங்களில் அப்பாடநெறிகளை பயில்வதற்கு விரும்பும் மாணவர்கள் கணக்கீடு பாடத்தினை தெரிவு செய்தல் சாலச் சிறந்ததாகும்.

11. பல்கலைக்கழகங்களில் மருத்துவ பாடநெறியை பயில விரும்பும் மாணவர்கள் கட்டாயமாக இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் எனும் பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

12. பொறியியல் பாடநெறியை பயில விரும்பும் மாணவர்கள் கட்டாயமாக இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் எனும் பாடங்களை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

13. க.பொ.த.(உ.த) வகுப்புகளில் தெரிவு செய்யப்பட்ட பாடங்கள் ஆங்கில மொழிமூலம் கற்பிக்க முடியும். இது தொடர்பான விபரங்களை அறிந்து கொள்வதற்காக அதற்குரிய சுற்றுநிருபங்களை பரிசீலனை செய்தல் வேண்டும்.